# சமாதானம் ஏற்படும் வரை படை நடவடிக்கையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சமாதானம் ஏற்படும் வரை படையினர் தமது நடவடிக்கையைத் தொடருவார்களெனப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்வது குறித்து எதுவித அறிவித்தல்களும் தங்களுக்குக் கிடைக்கப்பெறுததால் படையினர் தமது வழமையான நடவடிக்கையைத் தொடர்வார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகள்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 11 இதழ் 325
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-12-1994

மாநகராட்சி நூலகம் 26-12-1994 யாழ்ப்பாணம்

## புலிகளுக்கு எதிராக பொய்பிரசாரம் வேண்டாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக வீணை, வஷமத்தனமான பிரசாரத்தில் ஈடுபட வேண்டாமென அரசு சார்பு தொடர்பு துறையிலுள்ளவர்களை அரசு கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விஷமத்தனமான பொய்ப் பிரசாரம் சமாதானத்திற்கான வழிகளில் தடங்கல்களை ஏற்படுத்தி விடுமென அரசு கருதுவதாலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாம்.

அண்மைக்காலமாக அரசு

(4ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்த படையினரைக் கட்டுப்படுத்த அரசுக்கு நீண்ட நாள் செல்லும்!

[கொழும்பு]

**விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளில் பல முட்டுக்கட்டைகளை போடும் படையினரைக் கட்டுப்படுத்த அரசுக்கு நீண்டகாலம் பிடிக்குமென அரசியல் அவதானிகள் கருதுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப் புலிகளுடன் போதுஒரு திருமதி சந்திரிகா தலைமை யிலான அரசு ஆரம்பித்த சமாதான முயற்சிகளில் தற் தேக்க நிலை தென் படுகிறது. இதற்கு பெருமள வில் படையினரின் எதிர்ப்பு நடவடிக்கையே காரணமாயி ருப்பதாக கூறப்படுகிறது, போர்நிறுத்தம் ஒன்றை செய்வதற்கு படையினரின

(4ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்கு பல்வேறு நெருக்கடி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தற்போது பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுடுறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு. வேலை நிறுத்தங்கள். சமாதான பேச்சு தடங்கல் என பல்வேறு பிரச்னைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியவராயுள்ளார்.

இதுவரை நாட்களும் முன்னைய ஆட்சியாளரை பல்வேறு பிரச்னைகளுக்கும் குற்றம் சாட்டி வந்த ஜனாதிபதியும் பொ. ச. மு வினரும் தொடர்ந்தும் அதனை செய்ய முடியாத நிலையிலுள்ளனர். கடந்த நான்கு மாத கால

(4-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடித் தாக்குதலால் படை நடவடிக்கை முறியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் அரசபடையினர் மீது மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல் மூலம் கிழக்கில் படையினர் மேற்கொள்ளவிருந்த பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளதாம்.

பணிச்சங்கேணி இராணுவ முகாமிலிருந்து கஜூவத்தை முகாமிற்கு பெரும் எடுப்பில் மூன்று பேருந்துகள், ஒரு கண்டன் வாகனம், ஒரு ட்ரக் ஆகிய வாகனங்கள் மற்றும் அதிநவீன ஆயுத சகிதம் படையினர் பெரும் தாக்குதலுக்கு தயாராக வந்தனர்.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல் மூலம் ஒரு

[4ம் பக்கம் பார்க்க]

## கிளாலிப் பயணிகளிடம் பெருமளவுபணம் கொள்ளை

(நெல்லியடி)

கிளாலியிலிருந்து உழவு யந்திரத்தில் பயணம் செய்த பயணி ஒருவரின் பயணப்பையுடன் சுமார் ஒரு லட்சம் ரூபா பணமும் உடமைகளும் இனந்தெரியாதோரினால் சூறையாடிச் செல்லப்பட்டுள்ளது.

இத்துணிகர சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 - 30 மணியளவில் கிளாலியில் நிகழ்ந்துள்ளது.

கொழும்பிலிருந்து கிளாலி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட சுமார் 40 வயதுடைய பயணி ஒருவரே உழவு யந்திரத்தில் வரும்போது இனந் தெரியாத திருடர்களிடம்

[4ம் பக்கம் பார்க்க]

## அர்ஜுன் சிங்கிற்கு சோனியா ஆதரவு?

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்துள்ள திரு. அர்ஜுன்சிங்கின் செயல்களுக்கு திருமதி மதி சோனியா காந்தியின் ஆதரவு கிடைத்திருக்கலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

சோனியா காந்தி அரசியலில் ஈடுபடவில்லையாயினும், இவரது ஆதரவு அர்ஜுன் சிங்கிற்கு இருந்துவருவதும், இதனை வைத்துக்கொண்டே திரு. அர்ஜுன்சிங் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராகச் செயற்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அடுத்த பெப்ரவரியில் ஐந்து மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வி அடையுமானால் கட்சித் தலைமைக்குப் போட்டியிட திரு. அர்ஜுன்சிங் தம்மைத் தயார் நிலையில் வைத்திருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. -சி

## ஆசிரியர் சம்பள உயர்வு அடுத்தவருடம் சாத்தியமில்லை?

(கொழும்பு)

நாடும் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதால் ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு பெரும்பாலும் அடுத்த வருடம் சாத்தியப்படாது என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அடுத்த பட்ஜட்டில் துண்டு விழும் தொகை 6,700 கோடி ரூபாவாக இருக்குமென

(4ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். மாவட்டத்திற்கு அத்தியாவசியப்பொருட்கள் கொண்டுவர ஏற்பாடு

(பண்டத்தரிப்பு[

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி, விற்பனவு நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் யாழ். மாவட்டத்திலுள்ள 22 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து கொண்டுவந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

மாதாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் நிறையுள்ள பொருட்களை கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவதற்கு மேலிடத்திலிருந்து சமாஜத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது என்று மேற்படி சமா

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் நேற்றுகாலமானார்

(புதுடில்லி)

இந்திய முன்னாள் ஜனாதிபதி ஜியானி ஜெயில்சிங்' நேற்றுக் காலை தமது 78வது வயதில் காலமானார்.

கடந்த மாதம் 29ம் திகதி கார் விபத்தொன்றில் காயம் அடைந்த திரு. ஜெயில்சிங், சண்டிகார் பி. ஜி. ஐ. மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். காயமடைந்த நாளிலிருந்து இவரது உடல் நிலை மோசமடைந்தே வந்தது. கடந்த சில

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் செயலமர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், கல்வித் திணைக்களம் வலயம் -02 ஐச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களுக்குமான செயலமர்வு இன்று 26ம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் ம.வியில் காலை 8.30 மணி முதல் 4-30 மணிவரை நடைபெறவுள்ளது. - ரி

## வேலை நீக்க உத்தரவு

(நெல்லியடி)

வடக்குக் கிழக்கு மாகாண சபை பணிப்பாளரின் சிபாரிசுடன் பருத்தித்துறை அரசினர் மருத்துவமனைக்கு நியமனம் பெற்ற இரண்டு அமையப் பெண் தொழிலாளர்கள்சுமார் ஒரு மாத கால சேவையின் பின் வேலையிலிருந்து நீக்கும்படி பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது, -160

## தென்னம்பிள்ளை விநியோகம்

[பண்டத்தரிப்பு]

சங்கானையில் இயங்கும் வலி மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் கடந்த வாரம் 200 நல்ல இன தென்னம்பிள்ளைகள் கிராம சேவை அலுவலர்கள் ஊடாக வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் எலுமிச்சம் கன்று, பலாக் கன்று ஆகிய மரக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## விராட்சிக்குளம் திருத்தம்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி ஊரிக்காட்டு பகுதியிலுள்ள விராட்சிக் குளம் தற்போது தேசநிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவசர புனருத்தாரண நிதியிலிருந்து திருத்தப்பட்ட இக்குளம் ஆழமாக்கப்பட்டு அணைக்கட்டுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் நன்மையடைகின்றனர்.

## வைத்தியசாலையில் பற்சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

இம்மாதம் தொடக்கம் வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் ஒவ்வொரு செய்வாய்க்கிழமையும் பற்சிகிச்சை நடைபெற்று வருகின்றது.

சங்கானை அரசினர் வைத்தியசாலை பல்சிகிச்சை டாக்டர் செய்வாய்க்கிழமைகளில் மாத்திரம் வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலைக்கு சென்று பற்சிகிச்சை நோயாளர்களுக்கு சிசிச்சையளித்து வருகின்றார். 72

## கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய நிதியத்தினூடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

அந்தவகையில் கோப்பாய் வட்டத்தில் 30 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு கடந்த 13-ம் திகதி சிறுப்பிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் வைத்து ஒரு பயனாளிக்கு 10,000 ரூபா வீதம் மொத்தம் 3 இலட்சம் ரூபாவிற்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## திருவாசக முற்றோதல்

(கொழும்புத்துறை)

திருவாசக முற்றோதல் நடத்த விரும்பும் ஆலய பரிபாலன சபையினர் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்க நிர்வாகத்துடன் நேரிலோ கடிதமூலமோ தொடர்புகொள்ளுமாறு சங்கத் துணைத் தலைவர் திரு.சு.இராசரெத்தினம் தெரிவித்துள்ளார். (154)

# "எமது தேவைகளை திட்டமிட்டு நாமே செய்ய வேண்டும்"

## நிர்வாக பொறுப்பாளர் டொமினிக்

(உடுவில்)

''எமது பிரதேச தேவைகளை நாமேதிட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். சனசமூக நிலையங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற பொது அமைப்புக்கள் தத்தம் பகுதி அலுவல்களைக் கவனிப்பதில் கவனம் எடுக்க வேண்டும். எதிர்காலத் தேவைகளின் முக்கியத்துவம் உணரப்பட்டு செயற்படவேண்டும்''

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகப் பகுதியில் 1995 ம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்துக்கான திங்டமிடல் ஆலோசனைக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினர்.

உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ.மகாலிங்கம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. த. தேவராஜன் உட்பட இப்பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போனற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு 1995ம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் பற்றி கலந்தாலோசித்தார்கள்.

சனசமூகநிலையங்கள் போன்றவை தத்தமது பகுதிகளில் என்னென்ன செய்யவேண்டும் என்பதை பட்டியல் போட்டு வைத்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமைப்படுத்தவேண்டுமென இலகுவில் தீர்மானிக்க முடியும். இதுபோன்ற கலந்துரையாடல்களில் பொதுசனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் கலந்து கொள்வதன் மூலம் தமது பகுதிகளுக்கு பயன்கிடைக்கச் செய்யமுடியும் என்று திரு. டொமினிக்மேலும் தெரிவித்தார். 101 ரி

## தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை

(திருநெல்வேலி)

தமிழ் மொழி மூல ஆசிரியர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 28ம் திகதி நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சை நிலையங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதாக தெரிவிககப்படுகிறது.

இப் பரீட்சைக்கான வினாத்தாள், அனுமதி அட்டைகள் விரைவில் வந்துசேர உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது, -157

## மலேரியா தடுப்பு இரத்த பரிசோதனை நிலையம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். குருநகரில் இதுவரை காலமும் இயங்கிவந்த மலேரியா தடுப்பு இரத்தப் பரிசோதனை நிலையம் மீண்டும் தற்போது பழைய இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்டடுகிறது.

இதுகாலவரை குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த சுகநல சேவை நிலையத்தில் இயங்கி வந்த இரத்தப் பரிசோதனை நிலையம் யாழ். மத்திய மருந்தகத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலேரிய இரத்தபரிசோதனை சம்பந்தமான நோயாளர்கள் இனிமேல் யாழ்.மத்திய மருந்தகத்திற்கு மாற்றமாகியுள்ள மலேரியா நோய்த் தடுப்பு இரத்தப்பரிசோதனை நிலையத்துடன் தொடர்புகொண்டு தமது தேவைகளைப் பெறலாமென அறிவிக்கப்படுகிறது. 154

## கால்நடைபயிற்சிவகுப்புகள் நடாத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து கால்நடை வளர்ப்போரின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடன் மாதந்தோறும் கால்நடை பயிற்சி வகுப்புக்களை ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவு ரீதியாகவும் நடாத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் கடந்த ஒக்டோபர் மாதம் யாழ். குடாநாட்டில் சாவகச்சேரியில் 11 பயிற்சி வகுப்புக்களும், பருத்தித்துறையில் 5 பயிற்சி வகுப்புக்களும், வட்டுக்கோட்டையில் 2 பயிற்சி வகுப்புக்களும், சங்கானையில் 2 பயிற்சி வகுபபுகளும், தெல்லிப்பளையில் 1 பயிற்சி வகுப்பும் கோப்பாயில் 1 பயிற்சி வகுப்பும் என மொத்தமாக 22 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

இப் பயிற்சி வகுப்புக்களில் செயற்கை முறை சினைப்படுத்தல், நல்லின புல் வளர்ப்பு, ஆடு, மாடு, முயல் வளர்ப்பு கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றுதல் ஆகிய பயிற்சிகள் வழங்கட்டன.

## யாழ். குடா நாட்டில் பாண் பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பாண் பாவனை தற்பொழுது என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. பொது மக்கள் தற்பொழுது அதிகமான அளவில் காலை மாலை உணவாகப் பாணையே பயன்படுத்தி வருகிறார்கள். பாடசாலை செல்லும் மாணவர்களும் தமது மதிய போசனமாக பாணையே பயன்படுத்தி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டிருக்டம் விறகுத்தட்டுப்பாடு காரணமாகவும் விறகு விலை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் பாண் விலையை அரசு ஐந்து ரூபாவாகக் குறைத்திருப்பதுமே பொதுமக்கள் மத்தியில் பாண் பாவனை அதிகரித்திருப்பதத்குக் காரணமெனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

பாண் பாவனை அதிகரித்திருப்பதனைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புத் திணைக்கள அதிகாரிகள் பேக்கரிகளுக்கு முன்னரிலும் பார்க்க மாவிநியோகத்தை அதிகரித்துள்ளார்கள்.

உடன் பாண் பெறுவதற்காகப் பொது மக்கள் காலை மாலை வேளைகளில் பேக்கரிகளில் கூட்டமாக நின்று பாண் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. (162)

## 750 கைதிகள் விடுதலை!

[கொழும்பு]

நத்தார் பண்டிகையையொட்டி 750 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சின் சிபார்சின் பேரில் இந்த கைதிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

## துணிச்சுருளை திருடிய இளைஞர் பிடிபட்டார்

(ஆனைப்பந்தி)

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த துணிச்சுருளை திருடிச் சென்றவர் கடைக்காரரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் யாழ். நகரிலுள்ள புடவைக் கடையொன்றிலிருந்து சுமார் ஆயிரத்தி ஐநூறு ரூபா பெறுமதியான துணிச்சுருளை திருட்டுத்தனமாக எடுத்த பிரஸ்தாப நபர் அதனை சாரத்தினுள் போட்டுக் கொண்டு ஓட முற்பட்டபோது அயல் கடைக்கார இளைஞர் சிலரால் மடக்கிப் பிடிபட்டார். இவரிடமிருந்து துணி மீட்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட புடவைக் கடையினர் இவரை கடையினுள் தடுத்து வைத்திருத்தனர்.

நத்தார், புதுவருட கொண்டாட்டங்களையொட்டி காணப்பட்ட மக்கள் கூட்ட நெரிசலை சாதகமாக்கியே இந்நபர் தனது கைவரிசையைகாட்ட முற்பட்ட போதிலும் அது கைகூடவில்லை. 101-சி

## கல்வி அபிவிருத்தி கழக ஆசிரியர் மாதிரித் தேர்வு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை கல்விக்கோட்டத்தில் கடமை புரிகின்ற கல்வி அபிவிருத்திக்கழகஆசிரியர்களுக்குமான பொது அறிவு, பொது உளச்சார்பு எனும் இரு வினாத்தாள் மாதிரித் தேர்வினை நடாத்த கல்விக்கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளார்கள்;

இன்று 26ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 8-30 மணிக்கு கோப்பாய், உடுவில் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்ளைக் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் தவறாது உரிய நேரம் வருவதுடன் தேர்வு முடியதொடர்ச்சியாக பொது அறிவு, உளச்சார்வு சம்பந்தமாக விரிவுரையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. - ரீ


## தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடம்

தட்டெழுத்து, சுருக்கெழுத்து – தமிழ்

தகைமை:- க. பொ. த (சாதரண தரம்) பரீட்சையில் தமிழ் தட்டெழுத்து. சுருக்கெழுத்து உட்பட 06 பாடங்களில் சித்தி.

வயது:- 18 தொடக்கம் 40 வரை ஆண்/பெண் இருபாலாரும்.

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 28-12-94 காலை 9-00 மணிக்கு பழைய பூங்கா நடுவப் பணியகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்.
தமிழீழ காவல்துறை,

(எ-4607)

### மணிவாக்கு

ஒருவன் எப்போதும் காலதேச வர்த்தமானங்களையும் நான் யார்? என் சக்தி என்ன? என் வரவு செலவு என்ன? நண்பர்கள் யார்? எனப்பகைவர் யார்? என்பன. போன்ற விஷயங்களையும் சிந்தித் துக் கொண் டே இருக்கவேண்டும்.

- பஞ்சதந்திரம்

## இந்திய தடுப்பு சிறைகளிலுள்ள ஈழத் தமிழர் மீது கொடூரம்

(புதுடில்லி)

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் மிக கொடூரமாக நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு தடுப்பு முகாம்களில் கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் வடக்கு- கிழக்கு மலையக பகுதிகளைச் சேர்ந்த பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எதுவித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களது நிலைபற்றி மனித உரிமை அமைப்புக்களும் மௌனம் சாதிக்கின்றன.

இந்தக் கைதிகள் தடுப்பு முகாம்களில் சங்கிலியால் விலங்கிடப்பட்டுள் ளது டன் இவர்களுக்கு ஒழுங்கான உணவு வழங்கப்படுவதில்லை என்றும் மலசல கூடம் உட்பட பல அடிப்படை வசதிகளும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரி

## பரா(ுசெ (அரியாலை)

யாழ். நகர வீதி ஓரங்களில் ஏராளமான மரங்கள் நாட்டப்பட்டுள்ளன.

யாழ். அர்ச்சுனு வீதி, இராவின் தோட்ட வீதி ஆகிய வற்றிலும் வீதி ஓரங்களில் நாட்டப்பட்டுள்ளன. -56

### இன்று

(கொழும்புத்துறை)

யாழ், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று 26ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யேசு பிறப்பு ஒளிவிழா வணக்கத்துக்குரிய எப். ஆர் அன்ரன் மத்தாயஸ் தலைமையில் நடைபெறவுள்ளது, - 154

0 0 0

]உடுவில்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களின் கூட்டம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராசாவின் தலைமையில் மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் இன்று 26ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும், 1995 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படும். - 109

0 0 0

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தினால் கிறிஸ்மஸ்ஸை முன்னிட்டு உடுபிடவைகள் அன்பளிப்புச் செய்யப்படும் நிகழ்ச்சி இன்று 26ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது. -72

0 0 0

பண்டத்தரிப்பு)

திருகோண ம லை வி லு ள் ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு பதவி உயர்வு பெற்றுச் செல்லும் யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலவுக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர்களும் ஊழியர்களும் இணைந்து நடத்தும் பிரிவுபசார வைபவம் இன்று 26ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் சுழிபுரத்திலுள்ள பிரதேசசபை தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது. -72

## நமது நோக்கு

### மீண்டும் அவலக்குரல்

★ அடுத்த ஆண்டு பாதுகாப்புச்செலவு 2700 கோடி என்று தெரிவிக்கப்படுகிறது. இதனை நாடு தாங்காது.

★ பாதுகாப்பு வரி நீடிக்கக்கூடாது, சமாதானம் ஏற்பட்டால் அதனை நீக்கிவிடலாம்.

★ ஆயுதக்கொள் வன வுக் கணக்குகள் தெளிவாக இருக்கவேண்டும். மோசடிகள் இடம்பெறக் கூடாது. விசாரணைகள் வேண்டும்,

★ இலங்கையை வட்டமிட்ட வல்லூறுகள் சில பறந்துவிட்டன.

இப்படி யெல் லாம் நாடாளுமன்றத்தில் அன்மையில் குரல் எழுப்பியவர் யார்?

முன்னைய ஐ. தே. க. ஆட்சியில் பத்தாண்டுகளுக்கு மேலாக நிதி அமைச்சராக இருந்த ரொனி டி மெல்.

சுதந்திரக்கட் சிக் கும், ஐ. தே. கவிற்கும் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தவர் சில ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் புரிந்தவர்.

திருமுறை ஓதலின் போது ''நமப்பார்வதி பதயே', எனக்கூறப்படுவது போல கிறித்தவப் பிரார்த்தனையின் போது ''ஆமென்,' கூறப்படுவது போல தனது ஒவ்வொரு வரவு செலவுத் திட்ட உரையின் முடிவின்போது அவர் கூறியது நினைவிருக்கிறதா?

''இந்த யுத்தம் முடிவுக்கு வந்தால் பாதுகாப்புச் செலவு மிச்சமாகும். பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற அப்பணம் உதவும்''.

யுத்தச்செலவு நாட்டைப்பாழடிக்கும் வீண் செலவு என்பதை நிதிய மைச்சராக இருந்த அவர் உணர்ந்திருந்தார், எனவே போரை நிறுத்த வேண்டும் என அவர் அடிக்கடி குரல் எழுப்பினர்.

ஆனால் அவரது அமைச்சரவைச் சகாக்கள் அதனைக் காதில் வாங்கிச் செயற்பட்டார்களா?

இனக்குரோத சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள். ''எப்படியும் போராளிகளைப் புறமுதுகிடச் செய்யலாம்: மூன்று மாத கால அவகாசம் தாருங்கள்; இன்னும் ஆறுமாதங்கள்என்றுராணுவதலைமை கொடுத்த நம்பிக்கைக் குரலே மேலோங்கியிருந்தது.

அவரது குரல் புறக்குடத்து நீராகியதைத் தான் நாடு கண்டது.

இன்று மீண்டும் அவர் குரல் ஒலிக்கிறது. ஏன் சொல்கிறார்? உள்நோக்கம் என்ன? என ஆராயாது அவர் கூறுவதில் நியாயம் உண்டா என ஆராய்ந்து ஏற்கவேண்டிய கருத்துக்களை ஏற்க வேண்டியது அரசின் கடமை!

## லொறிகள் மீதான சோதனையை நிறுத்துமாறு கோரிக்கை

(வவுனியா[

கொழும்பிலிருந்து பொருட்களுடன் வரும் லொறிகள் மீதான சோதனைகள் நிறுத்தப்படவேண்டுமென்று வவுனியா வர்த்தகர்கள் பொலிஸ் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பிலிருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுடன் வரும்லொறிகள் ஈரற்பெரியகுளத்தில் வைத்து நீண்டநேரம் தடுத்து வைக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறது.

முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு ஈரற்பெரிய குளம் வரும் லொறிகள் சோதனைகளின் பின்னர் அடுத்த நாள் காலையே விடுவிக்கப்படுகிறது.

படையினரின் இச்சோதனை நடவடிக்கையினால் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே லொறிகள் மீதான சோதனையை நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-12-26

திங்கள் இரவு

| | |
|---|---|
| 08-01 | தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி |
| 08-20 | தாயகப் பாடல்கள் |
| 08 30 | செய்திகள் |
| 08-40 | தரிசனம்- கலைமணி சு. வடிவேல் அவர்களுடன் செவ்வி |
| 09-00 | இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

1994-12-27

செவ்வாய் காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம் |
| 07-15 | இன்றைய தரரகை |
| 07 30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 07-40 | தாயகப் பாடல்கள் |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

## இந்திய அரசுக்கு எதிராக அர்ஜுன்சிங் குற்றச்சாட்டு ஆதாரமற்றவை

(புதுடில்லி)

இந்திய அமைச்சரவையிலிருந்து இராஜினாமாச் செய்துள்ள மனிதவளத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அரசு தலைமை மற்றும் கட்சிக்கு எதிராக தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று மத்திய அமைச்சரவைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரு நாடாளுமன்ற அரசியல் வெற்றி தோல்வி இயல்பானதென்றும் ஆனல் அரசின் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளிலும் ஸ்தாபன ரீதியிலான தீர்மானங்களிலும் பங்கேற்று வந்த ஒருமூத்த தலைவரும் அமைச்சருமான ஒருவர் கட்சித் தலைவரை தாக்கிப் பேசி கட்சியை சீர்குலைக்கும் வகையில் முயற்சிப்பதாக மத்திய அமைச்சர்குழு புதுடில்லியில் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசியல் மற்றும் நாடாளுமன்ற அலுப்பினருக்குத் தேவையான நடைமுறைகளை கடைப்பிடிக்க திரு. அர்ஜுன் சிங் தவறிவிட்டார் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

திரு. அர்ஜுன்சிங் பதவி விலகியது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களின் முதலமைச்சர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநிலப்பிரிவுத் தலைவர்களும் கூறியிருக்கிறார்கள்.

ரி

## இராசி பலன்

26-12-1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 11)

அட்டமி மு. ப. 8-12 வரை, அத்தம் முன்னிரவு 3-26 வரை, சித்தயோகம், கரிநாள், இராகுகாலம் காலை 7-57 முதல் 9-27 வரை சுபநேரம் நண்பகல் 12-27 முதல் 1-57 வரை.

மேடம்: முட்டி மோதல், தந்திரோபாயம், பணபாடு.

இடபம்: குளப்ப மடைதல், தொழில் பகை, மனக் கலக்கம்.

மிதுனம்: விரக்தியடைதல், உடல் உபாதை, புத்திரர் கவலை.

கடகம்: நினைத்தது கைகூடல், விருந்துண்ணல், மகிழ்ச்சி.

சிங்கம்; கணவர் வன்மம், மனவேதனை. அலைச்சல்.

கன்னி: எதிர்பாராதஉதவி, சுபகாரியச் செலவு, பயண நன்மை.

துலாம்: அதிகாரிகள் சினம், வாக்கு வாதம், மனச்சுமை.

விருச்சிகம்: உறவில் மகிழ்ச்சி, தொழில் லாபம், பெண உதவி.

தனுசு: விவகாரங்களில் வெற்றி, கடமையுணர்வு, தற்பெருமை.

மகரம்: மனம் கலங்குதல், வீண்பீதி. பணக்கஷ்டம்.

கும்பம்: உறவினர் பகை; வைத்தியச் செலவு, துரோகத்தனம்.

மீனம்: நல்லோர் சந்திப்பு, வருவாய் அதிகரிப்பு, குடும்ப நன்மை.

ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### அமெரிக்காவிற்கு அன்னபூரணி!

வெளிநாட்டு மாப்பிள்ளைக்குப் போகும் மணப்பெண்ணு? இல்லவேயில்லை! பாய்க்கப்பல் கட்டும் கலையின் கடைசியிலேயே பிரான்ஸ் முதலிடம்; இரண்டாமிடம் வல்வெட்டித்துறை அங்கு கட்டப்பட்ட இரட்டைப் பாய் மரக்கப்பலே அன்ன பூரணி'!

இதன் சிறப்பை அறிந்த அமெரிக்கக் கடலோடி ரொபின்சன் விலைக்கு வாங்கினர். முழுக்க முழுக்க வல்வெட்டித்துறை மாலுமிகளே அமெரிக்காவிற்கு ஓட்டிச்சென்றனர். அதன் 'கப்டன்' யார்? வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தண்டையல் தான்!

முதலில்கொழும்புசென்ற இக்கப்பல் 27-1.1937ல் அமெரிக்கப் பயணத்தை ஆரம்பித்தது. இப்பயண விபரங்களைச் சுவைபடப் பத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளாக ராஜகோபால் எழுத 'ஈழநாடு' 1974ல் அதனை வெளியிட்டு ஆவணப்படுத்தியது?

—மயூரன்

## ஆங்கில ஆசிரியருக்கு கருத்தரங்கு நடத்த ஏற்பாடு

[திருநெல்வேலி]

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் தெரிவுசெய்யப்பட்ட வர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 2ம் திகதி முதல் ஒருவருடகாலம் சேவையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆசிரியர்கள் பாடசாலை ஆசிரியர்களாகவே கருதப்பட்டு முழுநேரம் செயற்படுவார்கள் எனவும் இரண்டு மணித்தியாலத்திற்கே சம்பளம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான கருத்தரங்குகளும் வலய மட்டத்தில் நடாத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. 157

### தமிழீழ நீதிமன்றில்:

## சங்கிலி அறுத்தவருக்கு 2,500 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

நாவற்குழிப் பகுதியில் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து தனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த பெண்மணி ஒருவரை அவ்வழியால் பின் தொடர்ந்த இளைஞன் ஒருவன் அப்பெண்மணி அணிந்திருந்த தங்கச்சங்கிலியை எதிர்பாராத விதமாக திடீரென அறுத்தபொழுது அப் பெண்மணியின் சாதுரியத்தால் அயலவர்களின் உதவியுடன் அவ் இளைஞனை மடக்கிப் பிடித்ததுடன் சங்கிலியின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது.

மேற்படி இவ் இளைஞனை காவல்துறையினர் அண்மையில் சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மன்றில் நீதியாளர் முன் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குற்றப்பணமாக 2,500 ரூபா செலுத்துமாறும் செலுத்தத்தவறின் 100 நாள் கட்டாய சமூகசேவை என்றும் இழப்பீடாக 2915 ரூபா என்றும் தவறின் ஒரு மாத காலச் சிறை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றேகால் பவுண் சங்கிலியில் முக்கால் பவுண் சங்கிலியின் ஒருபகுதி மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும் மிகுதி ஏனைய பகுதிக்கு இழப்பீடாகவே 2,915 ரூபா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 155

நீர் இன்றேல் ஏர் இல்லை
ஏர் இன்றேல் சோறில்லை

# இரகசிய ஒப்பந்தம் செய்ய அரசு - புலிகள் முயற்சியாம்

## ஐ. தே. க. முக்கியஸ்தர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளும் அரசும் இரகசிய ஒப்பந்தமொன்றுக்கு தயாராகி வருவதாக ஐ, தே. க. முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடா நாட்டை புலிகளிடம் ஒப்படைத்துவிடுவது: இருவருடங்களுக்கு புலிகளோடு மோதல் எதிலும் ஈடுபடாமல் தவிர்ப்பது: போன்ற விடயங்கள் இந்த இரகசிய ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருக்குமென அந்த முக்கியஸ்தர் கூறியுள்ளார்.

ஐ. தே. க, வின் இந்த பிரசாரத்தில் எதுவித உண்மையுமில்லை, இது அரசு - புலிகள் பேச்சுக்களை குழப்புவதற்காக ஒரு தியம்நோக்காகவே பரப்பப்படும் வதந்தி என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. -சி

## கரும்புலிகள் நினைவு நாள் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவு நாள் போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி, ப. 3 மணிக்கு யாழ், இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.மாவட்ட கலை, பண்பாட்டு கழக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கலைமணி தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை யாழ். மாவட்ட கலை. பண்பாட்டு சழக பொறுப்பாளர் திரு ஆ. குமணனும் சிறப்புரைகளை யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. திரு. சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி திரு. ச. காந்திதாசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார். இறுதியில் கலைநிகழ்ச்சியும் நடைபெறும். -சி

## மூன்று மாதத்திற்கான உணவு கையிருப்பில்

(கொழும்பு)

உணவுப் பொருட்களுக்கு எவ்விதமான தட்டுப்பாடும் கிடையாது என்றும் மூன்று மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருள் கையிருப்பில் உள்ளதாகவும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன தலைவர் எச். சி. சிறிசேன தெரிவித்துள்ளார்,

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் சீனியை பொறுத்த மட்டில் நட்டத்திலேயே விற்கவேண்டியுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் சிறியளவு இலாபத்துடன் மட்டுமே விற்கப்படுகிறது.

நுகர்வோரின் நன்மை கருதி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் கடமை நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (க - சி)

## மணற்காட்டு கடலில் சுழியில் சிக்கி இளைஞன் மரணம்

(நெல்லியடி)

உல்லாசப் பயணம் மேற்கொண்டு கடலுக்கு குளிக்கச் சென்றவர்களில் ஒரு இளைஞர் சுழியில் அகப்பட்டு பரிதாபமாக மரணமானர். மற்றொருவர் மயக்கமான நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பரிதாபசம்பவம் நேற்று பி.பகல் வடமராட்சி கிழக்கு கடல்பரப்பான மணற்காட்டில் நிகழ்ந்துள்ளது.

சுமார் எட்டு வருடங்கள் பிரான்ஸில் பணிபுரிந்துவிட்டு கடந்த வாரம் நாடுதிரும்பியவரான திருநெல்வேலியைச் சேர்ந்த சிவசங்கரன் - சண்முகநாதன் (வயது 24) என்னும் இளைஞரே மரணமடைந்தவராவர். இவருடன்கூடச் சென்றவரான சுரேந்திரன் (வயது 25) என்பவர் மயக்க நிலையில் மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார் (160-சி)

---

### யாழ். மாவட்டத்திற்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜத் தலைவரும், பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவருமான திரு. ச. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

மா, சீனி, பால்மா வகைகள், சவர்க்காரம், உரம் உட்பட பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் மாதாந்தம் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்படும் என்றும், ஆனல் இவற்றை கொண்டு வருவதற்கு கொழும்பிலிருந்து இங்கு வரும் கப்பல்களில் இடம் எடுப்பது மிகவும் கஷ்டமான பிரச்னையாக இருப்பதாகவும் எனினும் சமாஜம் பல்வேறு வழிகளில் இதற்கு முயற்சிசெய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (72-சி)

### ஆசிரியர் சம்பள
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கணிப்பிடப்பட்டுள்ளதால் சம்பள உயர்வுகள் சாத்தியப்படாதென கூறப்படுகிறது.

மேலும் பல பொருட்களில் விலைகளும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக பாணின் விலையும் அதிகரிக்குமென கருதப்படுவதாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. அண்மைக்காலமாக அத்தியாவசியப் பொருட்களின விலைஉயர்வை கட்டுப்படுத்த முடியாத நிலையில் திண்டாடும் பொ. ச.மு. அரசு அடுத்த வருடம் பல பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

### இந்திய முன்னுள்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களாக நெஞ்சில் சளியும், செங்கண்மாரிநோயும் இருந்து வந்தது, சிறுநீரகங்கள் சரியாகச் செயற்படவில்லை. தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் இறுதியில் நேற்றுக் காலை 7-40 மணியளவில் காலமானர்.

இவரது மறைவையொட்டி சகல மாநில அரசுகளும், மத்திய அரசும் 7 நாள் அரசு முறைத் துக்க தினம் அறிவித்துள்ளன. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கும். அரசு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெருது.

திரு, ஜெயில்சிங், பஞ்சாப்பில் பரித்கோட் மாவட்டத்தில் சந்மா என்ற இடத்தில் 1916ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி வறிய விவசாயி ஒருவருக்கு மகனுகப் பிறந்தார். சுதந்திரத்திற்கு முந்திய காலத்தில் அன்னியர் ஆதிக்கத்தை அஞ்சாமல் எதிர்த்துப் பேரராடினுர். 1938ல் பரித்கோட் காங்கிரஸை அமைத்தார். 1946ல் இணை அரசு ஒன்றை அமைத்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். 1948 முதல் 1952 வரை முன்னுள் பெப்சு அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார். 1952 முதல் 1962 வரை ராஜ்யசபா உறுப்பினராகவும் இருந்தார். 1962ல் பிரதாப்சிங் கைரோன் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். ஆனல் சீனப்படையெடுப்பை அடுத்து, பொதுமக்களின் கருத்தைத் திரட்டுவதற்காகப் பதவி விலகினுர். 1972 தேர்தலுக்குப் பின் பஞ்சாப் முதல்வரானுர். 1980ல் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுர். 1982 யூலை 25ம் திகதி முதல் 1987 வரை இந்திய ஜனுதிபதியாக இருந்தார்.

பஞ்சாப்பில் சீக்கியத் தீவிரவாதிகளின் 'காலிஸ்தான்' தனிநாட்டுப் போராட்டங்களின்போது இந்திய ஜனுதிபதியாகப் பதவி வகித்தார். இவர் ஜனுதிபதியாக இருந்த காலத்திலேயே தீவிரவாதிகளின் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது' பிரதமர் இந்திரா காந்தி தமது மெய்ப்பாதுகாவலர்களான சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1984ம் ஆண்டு யூன் மாதம் இந்தியப் படைகள் அம்ரிஸ்தரிலுள்ள சீக்கியரின் புனிதத் தலமான பொற்கோவிலுக்குள் பிரவேசித்து, அங்கிருந்த தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியமை திரு. ஜெயில்சிங் எதிர்நோக்கிய மிகப் பெரும் அரசியல் நெருக்கடியாகும். இத்தாக்குதலின் போது 1000க்கும் அதிகமானேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

திரு. ஜெயில்சிங்கிற்கு ஒரு புதல்வியும், மூன்று புதல்வர்களும் உள்ளனர். தற்போது இவரது பூதவுடல் சண்டிகார் யூனியன் பிரதேச விருந்தினர் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று காலை விசேட விமானம் மூலம் புதுடில்லியிலுள்ள இவரது இல்லத்திற்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

திரு. ஜெயில்சிங்கின் மறைவையடுத்து, மத்திய அமைச்சரவை நேற்றுப் பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் அவசரமாகக் கூடி அவருக்கு இரங்கல் தெரிவித்துள்ளது, நாளை செவ்வாய் அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

இவாது மறைவுக்கு ஜனுதிபதி, உப ஜனுதிபதி, பிரதமர் மாநில முதல்வர்கள் உட்படப் பலரும் அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர். சி

---

மன்னரில்

## பொலிஸ் நிலையமருகில் குண்டு வெடிப்பு

(மன்னர்)

மன்னர் எருக்கலம்பிட்டியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றிற்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் குண்டுஒன்றுவெடித்ததில் அவ்வீடு முற்ருக சேதமடைந்தது.

அதிர்ஷ்டவசமாக இக்குண்டு வெடிப்பால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. எனினும் குறிப்பிட்ட வீட்டு உரிமையாளர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளாராம்.

குறிப்பிட்ட பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-சி)

## காரைதீவுப் பகுதி சுற்றி வளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை காரைதீவுப் பகுதியை சுற்றிவளைத்த பொலிஸ் அதிரடிப் படையினர் இப் பகுதியில்உள்ள ஆண்கள் அனைவரையும் கைதுசெய்ததுடன் தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இவ்விசாரணையின்போது பலர் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. எனினும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக தகவல் இல்லை.

இப்பகுதியில் பொலிஸ் அதிரடிப்படையினர் இத்தகைய சுற்றி வளைப்புகளை அடிக்கடி மேற்கொள்வதால் பொதுமக்களின் அன்றுட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுவதாக இப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

### கிளாலிப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தையும். உடமைகளையும் பறிகொடுத்தவராவர்.

இதேவேளை உழவுயந்திரத்தில் பயணம் செய்த இளம் யுவதியின் கைப்பையை திருடிய திருடர்கள் கடவுச் சீட்டினுள் அடுக்கி வைக்கப்பட்ட மூவாயிரம் ரூபா பணத்தையும், கைப்பையையும் வேலியோரம் அனுதவராக வீசி எறிந்து விட்டு ஐநூறு ரூபா பணத்தை மட்டும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவமும் நேற்று முன் தினம் இரவு 11-30 மணியளவில் கிளாலிக் கடற்கரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

கொழும்பிலிருந்து யாழ். நகர் நோக்கி வந்த இளம் யுவதி ஒருவர் பஸ்ஸில் ஏறுவதற்காக: கிளாலிக் கடற்கரையிலிருந்து உழவு யந்திரத்தில் வேறு பயணிகளுடன் பயணம் செய்த சமயம் இனந்தெரியாதோரினுல் இவரது கைப்பை உருவி எடுத்துச் செல்லப்பட்டது.

வீதியில் மனவேதனையுடன் இறங்கிய இளம் யுவதி சிறிது தூரம் நடந்து செல்கையில் வேலியோரத்தில் அவரது கைப்பை அனுதவராகக் கிடந்துள்ளது. கைப்பையை எடுத்து திறந்து பார்த்த சமயம், அதனுள் இருந்த கடவுச் சீட்டினுள் வைக்கப்பட்டிருந்த பணம் ரூபா மூவாயிரம் அப்படியே இருந்துள்ளது, ஆனல் கைப்பையில் வேறொரு பகுதியில் வைக்கப்பட்ட ரூபா ஐநூறு மட்டும் திருடர்களினுல் திருடிச் செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது. (160 - சி)

### புலிகளுக்கு
1ம் பக்கத் தொடர்ச்சி)

சார்புப் பத்திரிகைகள் புலிகளுக்கு எதிரான விஷமத்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருவதும் தெரிந்ததே. (சி)

### சத்திரிகாவுக்கு
[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சியில் மக்கள் பல நெருக்கடிகளையே எதிர்கொண்டுள்ளனர். இதுவரை காலமும் இல்லாத அளவு அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### கண்ணிவெடித்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரக் முற்ருக சேதமடைந்ததும் படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதும் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததும் தெரிந்ததே.

எனினும் இத்தாக்குதலினுல் படையினருக்கு ஏற்பட்ட முழுமையான சேதம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (க-சி)

### சமாதானம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்கின்றபோதும் முழுமையான சமாதானம் ஏற்படும் வரை படை நடவடிக்கைள் நிறுத்தப்படாது. வடக்கு-கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக படையினர் தமது சகல நடவடிக்கைக்களையும் தொடர்ந்தும் மேற்கொள்வார்கள் எனவும் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். - கி

### புலிகளுடன்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்மதத்தை பெறவும் அவர்களை திருப்திபடுத்தவும் நீண்டமுயற்சிஅரசுக்கு தேவைப்படுகிறது. இந்நிலையில் போக்குவரத்து பாதை திறப்பு, முற்றுன பொருளாதாரத்தடை நீக்கம் உட்பட பல்வேறுபட்ட பிரச்னைகளை தீர்க்கும் வகையில் முன்னேக்கிச் செல்ல அரசை எவ்வளவு தூரத்திற்கு படையினர் அனுமதிப்பார்கள் என்றதொருநிலையேதற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் படையினரை கட்டுப்படுத்தி தமது அதிகாரத்தின் கீழ் அவர்களை கொண்டுவரவும் அதன் மூலம் சமாதான முயற்சிகளை தொடரவும் புதிய அரசுக்கு நீண்ட நாட்கள் பிடிக்குமெனவும் அவதானிகள் கருதுகின்றனர். -சி

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-